திருவாமாத்தூர் ஸ்ரீ திருவேங்கடநாதர் அருளிச் செய்த

கீதாசாரத் தாலாட்டு



கலாக்ஷேத்திரா பப்ளிகேஷன்ஸ்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - காரைக்குடி 630307
சிவகங்கை மாவட்டம்
போன் : 04565 236846, 238783

கோவிலூர் மடாலயம்
52 குப்பையாசெட்டி தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033
போன் : 044 - 24743081

E-mail: koviloormutt@gmail.com

(பாடம் ஆரம்பிக்கும் பொழுது)

நடராஜர் வணக்கம்

1 உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.

கோவிலூர் மடாலய வணக்கம்

2 வானவர் அசமாம் தொடர்பினால் உலகோர் வழுத்துறும் வன்னி ஐங்கரனை
வானவரதன மணி அறுமுகனை மாசறு கொற்றவாள் இறையை
வானவர் முதுவன் பாலனவலவன் வணங்கு நல்திருநெல்லை மாதை
வானவரதனாம் முத்திராமேச வள்ளலை வணங்கி வாழ்த்திடுவோம்.

ஐவர் துதி

3 ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன் அம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

4 பாயிரச் செய்யுட்கள்

சிறப்புப் பாயிரம்

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள்-கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாரும்
கருத்துயர்தீர்ந்(து) எய்தக் கதி.

காப்பு

ஐவகைப் பொருளும் நான்கு கரணமும் குணங்கள் மூன்றும்
செய்வினை இரண்டும் ஒன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய் இருள் அகல ஞானப் பொருள் கதிர் விரித்தபுத்தேள்
கைவளர் ஆழி செங்கண் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்

உ

சிவமயம்

கீதாசாரத் தாலாட்டு

சிறப்புப் பாயிரம்

ஆக்கியோன் பெயர், நூல் வந்த வழி, நூற்பெயர், நூற்பயன், நூற்பொருள், கேட்போர் தன்மை என்னும் ஆறினையும் கூறுகின்றார்.

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள் – கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாரும்
கருத்துயர்தீர்ந்(து) எய்தக் கதி.

திருவாமாத்தூரில் சிறப்புற வாழ்ந்த வேத விற்பன்னரான வேங்கடநாதன் என்பவர் அர்ஜுனனுக்கு கண்ணபிரான் அருளிய பகவத் கீதை என்ற நூலை விவரமாக எடுத்துச் சொன்னார். உயர்ந்த கருத்துக்களைத் தாலாட்டு வடிவமாக அமைத்து உரைத்திருக்கிறார், வேங்கடநாதன் என்ற கவி. இதைப் படிப்பவர்கள் மீண்டும் பிறவி எடுக்கமாட்டார்கள்.

காப்பு

ஐவகைப் பொருளும் நான்கு கரணமும் குணங்கள் மூன்றும்
செய்வினை இரண்டும் ஒன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய் இருள் அகல ஞானப் பொருள் கதிர் விரித்தபுத்தேள்
கைவளர் ஆழி செங்கண் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி ஆகிய ஐந்து பூதங்களும்; வியானன், பிராணன், அபானன், சமானன், உதானன் என்ற ஐந்து வாயுக்களும்; வாக்கு, பாணி, பாதம், பாயுறு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும்; சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்டிவை, கிராணம் என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும்; சத்தம், பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து விஷயங்களும் ஐவகைப் பொருள்கள்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும்; சத்துவம், ரஜஸு, தமஸு ஆகிய குணங்கள் மூன்றும்; நல்வினை, தீவினை ஆகிய இவ்வியாவும் ஒன்றி நான் எனது என்ற அகம்பாவத்தில்

தோய்ந்து மயங்கி அனைவரும் திகைத்து நிற்கின்றனர். ஞானசூரியனாகக் கையில் சுதர்சனம் என்ற சக்கரத்தை ஏந்தி நிற்கும் செந்தாமரைக் கண்ணனை மனதினுள் வைத்து தியானம் செய்து அஞ்ஞான இருள் நீக்கப் பெறுவோம்.

நூல்

1. **சீர்ஆரும் பரமார்த்த தெரிசனத்தை அருள்செய்யப்**
பேர்ஆரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ.

சிறப்புடைய ஆத்ம தரிசனத்தை அருச்சுனன் காணுமாறு அருள் செய்ய ஆசிரியனாக இங்கு எழுந்தருளி வந்தவர் நீர்தானோ.

2. **திருத்தேரில் சாரதியாய்ச் சேர்ந்துஇருந்தும் கீதையினால்**
அருச்சுனற்கு மெய்ஞ்ஞானம் அனைத்தும்*உரை செய்தவரோ.

சிறந்ததொரு தேர்ப்* பாகனாய் இருந்து கீதை என்னும் உபதேச உரைகளால் அருச்சுனனுக்கு மெய்யறிவையும் அதற்குத் தொடர்பான எல்லாவற்றையும் உரைத்தருளிய கண்ணபிரான் நீர்தானோ.

3. **செஞ்சமரில் பந்துசனம் சேதம்வரும் என்றுஇரங்கி**
அஞ்சினவன் பயம்தீர்த்தே அமர்செய்யச் சொன்னவரோ.

நேர்மையான அறப் போரில், (தர்ம யுத்தத்தில்) உறவினர்க்கு நாசம் வருமே எனப் பரிதவித்து அஞ்சிய அருச்சுனனின் அச்சத்தைத் தம் உபதேசத்தால் நீக்கிப் போர் செய்ய வழி சொன்னவர்.

4. **சுற்றம்அறில் சோகம்எனச் சொல்லினைச்சற்று அறிந்தவன்போல்**
கற்றுஉணர்ந்த பேர்அதனால் கலங்கார்காண் என்றவரோ.

"உறவினரும் பிறரும் அழிந்து போனால் எனக்குத் துக்கம் வரும் என்பதை இப்போதுதான் உணர்ந்தவனைப் போல் கூறிய அருச்சுனா! சாத்திரங்களை நன்கு

---

* *அனைத்தும் - கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம்.*

* *அக்னி பகவானால் அருச்சுனனுக்கு அளிக்கப்பட்ட தேரில் பார்த்த சாரதியாய் இருந்து வழிகாட்டினார்.*

குருவின்பால் கற்றுணர்ந்த ஞானிகள், அதற்காகக் கலங்கிடார்" என உரைத்த கண்ணபிரான்.

5. கலங்காரோ இறப்புவரில் கற்றுஉணர்ந்த பேரேனும்
மலங்காமல் நான்இருக்கும் வகைஉரையும் எனவினவ.

அருச்சுனன் வினா – குரு வழியாகச் சாத்திரங்களை முறையாகக் கேட்டு உணர்ந்தவர் ஞானிகளாய் இருந்தாலும் சுற்றத்தினர்க்கோ, தனக்கோ, மரணம் வரும்போது கலங்க மாட்டார்களா? அப்படி நானும் மனம் சிதறாமல் இருக்கும் முறைகளை அடியவனுக்கு உரைத்தருள்க.

6. நீயும்நா னும்புவிமேல் திருபர்களும் மெய்உணர்வால்
ஆயும்கால் பிறந்துஇறப்பது ஆர்க்கும்இலை என்றவரோ.

கண்ணனின் விடை – உண்மையினை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அருச்சுனனாகிய நீயும், இறைவனாகிய நானும், இவ்வுலகில் உள்ள முடி மன்னர்களும், பிறரும் பிறத்தல் இறத்தல் இரண்டுமே இல்லாதவர்கள்.

7. ஈங்குஎவர்க்கும் பிறந்துஇறப்பது இல்லைஎன்றீர் இவ்வுலகில்
நீங்குபவம் ஆர்க்குஇதனை நிச்சயமாய்ச் சொல்லும்என.

அருச்சுனன் வினா – இவ்வுலகில் ஜனனம் மரணம் இரண்டுமே யாருக்கும் கிடையாது என உரைத்தீர். அவ்வாறாயின் இங்கு பிறத்தலும் இறத்தலும் எவர்க்கு என்பதனை உள்ளபடி உறுதியாகச் சொல்லும்.

8. இத்தரையில் பிறந்துஇறப்பது எடுத்தஉடற்கு அடுத்தபொறி
நித்தியம்ஆ கியஆன்மா நின்சொரூபம் என்றவரோ.

கண்ணனின் விடை – இத்தரையில் பிறந்து இறப்பது முன் பிறவிக் கர்மத்தின் படி உடலுக்கு நேரிடுகிறது. அப்படியானால் உன் தன்மை யாது என நீ கேட்பாயானால் உன் வடிவம் அழிவில்லாத ஆத்மாவின் வடிவமேயாகும்.

9. அங்கம்உயிர் இந்தியம்நான் அன்றிவேறு எனைக்காணேன்
இங்குயான் வேறுஉண்டேல் எனக்குஅறியப் புகலும்என.

அருச்சுனன் வினா – நான் என்னும் பொருளில் அமைந்த என் வடிவம் வெளிக் காணும் உடல், உயிர், இந்திரியங்கள், உடற் கருவிகள் ஆகிய இவைகளேயன்றி, என் வடிவாக நீர் கூறிய ஆத்மாவை நான் இங்கு காணேன். இங்கு 'நான்' என்ற சொல்லுக்குப் பொருளான ஆத்ம வடிவம் வேறு இருக்குமானால் எனக்குத் தெரியும்படி உரைத்தருள்க!

10. மெய்உயிர்இந் தியங்கள்• அல்லால் வேறுஅறியேன் என்றவனைப்
பையஅவை யால்அறியப் படானும்நீ என்றவரோ.

கண்ணனின் விடை – கண்ணாற் காணப்படும் இவ்வுடல் உயிர் இந்திரியங்கள் ஆகியவைகளாக நான் விளங்குகின்றேன். இவற்றினின்றும் வேறாக என் வடிவினை நான் அறியவில்லை, என்று சொன்ன அருச்சுனனை நோக்கிக் "குழந்தாய்! உயிர், இந்திரியம், உடல் இவற்றால் உணரப் படாதவனும் நீயே" என்றார்.

11. தேகம்வேறு ஆகில்அதைச் சேர்ந்ததுஇவண் ஏதுஎனவே
சோகமே விளைகருமத் தொடர்ச்சியினால் என்றவரோ.

அருச்சுனன் வினா – இவ்வுடல் என் வடிவிற்கு அந்நியப் பட்டதென்றால் இவ்வுடலினை இங்கே அவ்வாத்மா அடைந்ததெப்படி?

கண்ணனின் விடை – பிறப்பு, இறப்பு ஆகிய இவற்றினால் உண்டாகும் துன்பம் முற்பிறவிப் பாவ புண்ணியச் செயல்களின் தொடர்பினால் வருபவை.

12. தேகம்எடா முன்கருமச் செயல்வரும்ஆ(று) ஏதுஎனவே
ஏகமா மரமும்வித்தும் எனும்முறைபோல் என்றவரோ.

அருச்சுனனின் வினா – முன்பிறவியில் செய்த வினைகள் உடல் எடுப்பதற்குக் காரணம் என்றால் உடல் எடுப்பதற்கு முன்னால் புண்ணிய பாவச் செயல் எவ்வாறு வருகிறது?

• இந்திரியங்கள் • ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து

கண்ணனின் விடை – மரத்தினால் விதை உண்டாகிறது. அவ்விதையினால் மரம் உண்டாகிறது. விதை காரணம். மரம் காரியம். இது முடிவின்றித் தொடரும் செயல். உடல் உண்டாவதற்கு முன் வினையும், அச்செயலுக்கு உண்டான உடலும் காரண காரியத்துடன் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

13. காயமும்தா னும்பிறிதேல் கன்மம்எவர் செய்ததுஎனத்
தீயஉடற்(கு) அலதுகன்மச் செயல்தனக்(கு) ஏதுஎன்றவரோ.

அருச்சுனன் வினா – இவ்வுடலும் ஆன்மாவும் வெவ்வேறாயின் நல்ல கருமம் தீயகருமம் இவைகளைச் செய்தவர் யாவர்?

கண்ணனின் விடை – அத்தீவினை, நல்வினையாகிய தொழில்கள் குற்றம் உடைய உடலுக்கேயன்றி ஆன்மாவாகிய தனக்கு எப்படி வரும்? அவ்வாறு வருவது இல்லை.

14. படர்கருமம் உடல்செய்யில் பலம்உறுவது ஆர்க்குஎனவே
அடர்பலமும் உடற்கேயாம் அறிவார்க்கு ஏதுஎன்றவரோ.

அருச்சுனன் வினா – நன்மை தீமைகளைத் தரும் செயல்களை உடலே செய்யுமானால் அவற்றின் பாவ புண்ணியப் பலன்களை அடைதல் எவர்க்கு உரியது?

கண்ணனின் விடை – புண்ணிய பாவப் பலன்கள் உடலுக்கேயாம். அறிவு வடிவமாக இருக்கும் ஆன்மாவிற்கு எப்படி வரும்?

15. வெய்யவினை உடற்குஎன்றால் மெய்இங்கே விழஆன்மா
ஐயம்அற நரகசொர்க்கம் அநுபவிப்பது ஏதுஎனவே.

அருச்சுனனின் வினா – கொடிய வினைகளால் உண்டாகும் பலன்கள் உடலுக்கே உரியது என்று கூறினால் என்னால் காணப்படும் உடல் இவ்வுலகில் இறந்து பிணமாக விழுந்து போகத் தனித்து நின்ற ஆன்மா நரகத்தில் துன்பத்தையும் சொர்க்கத்தில் இன்பத்தையும் அநுபவிப்பது என்பது எப்படி?

16. அநுபவமே இலைஅதுவின் ஆரோபி தநிகழ்த்தில்
தநுகரணச் செயல்தனதாச் சார்வதுபோல் என்றவரோ.

கண்ணனின் விடை – நரக சொர்க்கம் அநுபவிப்பதென்பது ஆராய்ந்து காணுங்கால் அது அநுபவமே இல்லை, பருவுடலுக்கும் அகக் கருவிக்குமான

தொழில்களை தன்னுடைய தொழில்களாகக் கருதுவது போல அது ஒரு பயனற்ற மாயத் தோற்றம்.

(நரகத்தில் கஷ்டப்படுவது, சொர்க்கத்தில் இன்பம் அனுபவிப்பது என்பதெல்லாம் கூட மாயையே என்பது கருத்து).

17. மற்றுஉடலின் செய்கைதன்மேல் வருமயக்கம் ஏதுஎனவே
முற்றுணர்வு ஒன்றுஇல்லாத மோகம்என்று சொன்னவரோ.

அருச்சுனன் வினா – பருத்தல், இளைத்தல், பார்த்தல், நடத்தல் முதலிய உடலின் செய்கைகளை ஆன்மா மீது வந்து, பார்த்தேன், நடந்தேன் எனத் தோன்றும் மயக்கம் எப்படி வந்தது?

கண்ணனின் விடை – முழுமையான அறிவைப் பெறாமல் தத்துவ ஞானம் இல்லாத மயக்கத்தால் தோன்றுகிறது.

18. அறிவுதே கம்தனக்கோ ஆன்மாவிற் கோஎனவே
பிறிவுசெயில் அசித்துஉடலம் பிரமம்அறிவு என்றவரோ.

அருச்சுனனின் வினா – அறிவு உடலுக்கா? அல்லது ஆத்மாவிற்கா?

கண்ணனின் விடை – உடலையும் ஆத்மாவையும் பிரித்துப் பார்க்கும்போது உடல் அறிவற்றது. ஆன்மாவாகிய பிரம்மமே அறிவு வடிவானது.

19. தேகம்அசித்து ஆகில்இந்தச் செயல்வருவது ஏதுஎனவே
ஏகபரஞ் சோதியின்முன் இருக்கையினால் என்றவரோ.

அருச்சுனன் வினா – உடல் அறிவற்றது என்றால் அதற்கு இயங்குதல் முதலான தொழில்கள் வந்து சேர்தல் எப்படி?

கண்ணனின் விடை – சேதனம்* ஆகியஒரே பரம்பொருளின் சன்னிதானத்தில் (பிரம்மப் பிரகாசத்தில்) உடல் இருப்பதால் இந்திரியங்களின் மூலம் அதற்குச் செயல்கள் உண்டு.

20. இருக்கினும்அ சேதனத்திற்கு இச்செயல்உண் டோஎனவே
உருக்குபடாக் காந்தம்முன்னில் ஊசிநிகர் என்றவரோ.

---

* *சேதனம் – அறிவு வடிவம்.*

அருச்சுனன் வினா – அவ்வாறு உணரும் தன்மை பெற்று இருப்பினும் கல் போன்று ஜடமான அறிவற்ற உடலுக்கு வளர்தல் (பருத்தல்) பார்த்தல் ஆகிய இத்தொழில்கள் உள்ளனவோ?

கண்ணனின் விடை – காந்தத்தின் முன்னிலையில் அசையாத இரும்பு ஊசிக்கு அசைவுகள் உண்டாவது போல அறிவற்ற ஜடமான உடலுக்கும் வளர்தல், பருத்தல் ஆகிய செயல்கள் பரம்பொருளின் சன்னிதானத்தில் உண்டாம்.

21. **சொன்னசெயல் உடற்குஆனால் சுகதுக்கம் யார்க்குளவே**
அன்னசுக துக்கமும்தான் அவ்உடற்கே என்றவரோ.

அருச்சுனன் வினா – முற் கூறிய நன்மை தீமை ஆகிய தொழில்கள் உடலுக்கு என்றால் அதனால் வரும் பயனாகிய இன்பமும் துன்பமும் எவருக்கு?

கண்ணனின் விடை – அவ்வாறுவரும் இன்பமும் துன்பமும் கூட உடலுக்கே.

22. **சேதனமாம் ஆன்மாவைச் சேராத துக்கசுகம்**
ஓதுசடம் ஆம்உடலை உற்றிடுமோ சொல்லும்என.

அருச்சுனனின் வினா – ஞான வடிவான ஆன்மாவை பாதிக்காத துன்பமும் இன்பமும் போகத்திற்கு இடமான அறிவற்ற உடலைச் சேருமா? அடியேனுக்குச் சொல்லியருள்க.

23. **பூதம்ஐந்தோடு ஐந்துஉயிர்கள் புலன்கள்பத்து மனம்முதல்நான்கு**
ஈதுஇருமெய் இதில்மனத்துக்கு இன்பதுன்பம் என்றவரோ.

கண்ணனின் விடை – ஐந்து பூதங்களுடன், ஐந்து பிராணன்களுடன், புலன்கள் பத்தும், மனம் முதல் நான்கும், ஆகிய 24 தத்துவங்களே பருவுடலும்* நுண்ணுடலும்* ஆகிய இரு சரீரங்கள். இதில் மனத்திற்குத்தான் இன்ப துன்பங்கள் பொருந்தும்.

24. **இந்தஇரு வகைத்தனுவிற்கு ஏது*ஏது ஏனவினவ**
முந்தியகா ரணம்அதனால் மூன்றுதனு என்றவரோ.

---

* *பருவுடல்– ஸ்தூல சரீரம், நுண்ணுடல்–சூக்ஷ்ம சரீரம்.*

* *ஏது • ஹேது • மூலம்.*

அருச்சுனன் வினா – பருவுடல் நுண்ணுடல் என இருவிதமாகக்கூறப்படும் இவ்வுடலுக்குக் காரணம் யாது?

கண்ணனின் விடை – இவற்றிற்கு முற்பட்ட காரணம் அஞ்ஞானம். அந்த அஞ்ஞானத்தால் வந்தது இந்த உடல் ஆகும். எனவே இது காரண சரீரம். இக் காரண சரீரத்தோடு மேலே கூறிய இரண்டுடலும் சேர மூன்று உடல்களாக அவை கருதப்படும்.

25. மனம்அறியும் துக்கசுக வரவுஎன்றீர் அம்மனமும்
வினவில்அசே தனம்அலவோ விரித்துஎனக்கு விளம்பும்என.

அருச்சுனன் வினா – இன்ப துன்பங்களின் வரவினை மனமானது உணரும் எனக் கூறியருள் செய்தீர். ஆராயும் இடத்து அந்த மனமும் அறிவற்றது அல்லவோ? இதனை நான் அறிந்து கொள்வது எவ்வாறு என்பதனை எனக்கு விரித்துரைக்க வேண்டும்.

26. அம்மனத்தில் ஆன்மா அபேதம்போல் தோன்றுதலால்
விம்முதுக்க சுகத்தைமனம் மேவும்என்று சொன்னவரோ.

கண்ணனின் விடை – முன்னே சொன்ன அந்த மனத்தின் கண் ஆன்மா ஒன்று பட்டது போலத் தோன்றுதலால் மிகுதியான இன்ப துன்பங்களை மனமும் அடையும். (மனமும் ஆன்மாவும் ஒன்று என்று நாம் கருதுவதால் "நான் துக்க சுகங்களை அனுபவிக்கிறேன்" என்று மயங்குகிறோம்)

27. அந்தமனோ துக்கசுகம் அதனிடத்து நில்லாமல்
வந்துஇலங்கும் ஆன்மாவை மருவியதுஎன் சொல்லும்என.

அருச்சுனன் வினா – மனம் அனுபவிக்கின்ற இன்பதுன்பங்களை மனத்தோடு நில்லாமல் அறிவு வடிவான ஆன்மாவையும் பாதிக்கின்றதே, அது ஏன்?

28. வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியின்ஊடு
உய்யபுனல் ஊடுவந்து அங்கு ஒன்றுதல்போல் என்றவரோ.

கண்ணனின் விடை – வெப்பம் மிகுந்த தீயின் கனல்படும்படியாக அதன்மேல் வைக்கப்பட்டச் சட்டியிலே ஊற்றிய தண்ணீரில் அத்தீயின் சூடு ஏறுவது போல, இன்ப துன்பங்கள் ஆன்மாவை பாதிக்கின்றன. (உள் மயக்கத்தினால்)

29. சித்துஆகும் ஆன்மாவும் செடம்ஆகும் சித்தமும்தான்
ஒத்துஆங்கு இரண்டும்ஒன்றுஆய் உற்றவகை சாற்றும்என.

அருச்சுனன் வினா - ஞான வடிவான ஆன்மாவும், அறிவற்றதாகிய மனமும் ஆகிய இரு பொருள்களும் வேற்றுமையின்றி ஒன்றானது போலப் பொருந்திய விதம் கூறியருள்க.

30. வல்இரும்பு கனலுடனே மருவியது போல்மனமும்
ஒல்லையில்ஆன் மாஉடனே உற்றதுகாண் என்றவரோ.

கண்ணனின் விடை - கடினமான இரும்பு, சிவந்த ஒளியுடைய தீயில் இருக்கையில் அத்தீயின் ஒளியைப் பெற்று விளங்குதல் போல, அறிவற்ற மனமும் சுய ஒளியோடு திகழும் ஆன்மாவுடன் ஒன்றானதுபோல் தொன்று தொட்டுப் பொருந்தியது.

31. உற்றதுஎத னால்எனவே உள்ளம்அவி வேகம்உறப்
பற்றியதன் மேலும்அதன் பண்புவந்தது என்றவரோ.

அருச்சுனன் வினா - மனத்தினைச் சேர்ந்த சுக துக்கங்களை ஆன்மாவும் அனுபவிப்பது போலத் தோன்றுவது எதனால்?

கண்ணனின் விடை - அவிவேகத்தினால் ஆன்மாவினிடம் மனத்தின் சுக துக்க அனுபவம் வந்ததுபோல் தோன்றியது.

32. அடுத்தகுணம் போமோபின் ஆன்மாவை விட்டுஎனவே
எடுத்தசெம்பூ நிறம்படிகத்து ஏறுதல்போல் என்றவரோ.

அருச்சுனன் வினா - ஆன்மாவினை அவ்விதம் கட்டுப் படுத்திய இன்ப துன்பங்களாகிய குணங்கள் ஆன்மாவை விட்டு நீங்குமா?

கண்ணனின் விடை - சிவப்பான பூவின் நிறம், அதன்முன் இருக்கும் வெண்மையான படிகத்தின் மீது படிந்து படிகமும் சிவப்பாகத் தோன்றும். படிகத்தின் முன்னுள்ள செம்பூ நீங்கியதும் படிகத்தின் மேலுள்ள சிவந்த நிறம் நீங்குவது போல் ஆன்மாவுடன் தொடர்புற்ற இன்ப துன்பங்கள் விவேகம் அடைந்த காலத்துத் தானாகவே நீங்கும்.

33. சுத்தபடி கம்போல்சொ ரூபமாய்த் தான்இருக்க
மெத்தவும்ஆ சாமலினம் மேவியதுஏன் சொல்லும்என.

அருச்சுனன் வினா – களங்கமில்லாத பளிங்கு போன்ற ஆன்மா எப்பொழுதும் ஒரே தன்மையுடையதாய் இருக்க, ஆசை என்ற களங்கம் ஆன்மாவை மிகுதியும் பாதிப்பது எதனால்?

34. அநாதியாம் வாசனையால் அடைந்ததுஆ சாமலினம்
மனோபந்தம் இருக்கில்முத்தி வாராதுஎன்று உரைத்தவரோ.

கண்ணனின் விடை – தொன்று தொட்டு வரும் பழைய கருமங்களின் வாசனையால் மனமானது ஆசையாகிய களங்கத்தை அடைந்தது. மனத்தின் கண் ஆசை பாசம் இன்பம் துன்பம் இவை இருக்குமாயின் வீடு பேறு கிடைக்காது.

35. பந்தம்ஏது முத்திஏது பகுத்துரைக்க வேண்டும்என்தன்
சிந்தைதெ ளியஎன்று திருத்தாளி லைவணங்க.

அருச்சுனன் வினா – பந்தம் என்பது என்ன? வீடுபேறு என்பது யாது? என் சித்தம் தெளிவடையும் பொருட்டு இவற்றைப் பிரித்து உரைத்தருள வேண்டும், என்று கூறி கண்ணபிரானின் திருப்பாதங்களை வணங்கினான்.

36. தேகாதி தான்எனவே சேர்அபிமா னங்கள்பந்தம்
ஆகாத மானம்விடில் அரியமுத்தி என்றவரோ.

கண்ணனின் விடை – உடல் முதலியவற்றைத் தன் வடிவம் என நம்புகின்ற அபிமானமே நான், எனது என வரும் (பற்றுக்களுமே) பந்தமாம். அபிமானம் நீங்கினால் அதுவே அரிதான வீடு பேறு ஆகும்.

37. அபிமானம் வரும்வகையும் ஆங்குஅதனைத் தீர்வகையும்
தபியாமல் நான்அறியத் தயவுஆகக் கூறும்என.

அருச்சுனனின் வினா – முற் கூறிய நான் எனது என்னும் பற்றினால் உண்டாகும் அபிமானமும், அதனால் ஏற்படும் பந்தம் வருகின்ற தன்மையையும், அப்பற்றினை நீக்குகின்ற தன்மையையும் அடியேன் எளிதாக அறிய அருள் கூர்ந்து கூறுக.

38. **மறந்திடும்அஞ் ஞானத்தால் மானம்*வந்தது அஞ்ஞானம்**
இறந்துவிடின் மானமும்போம் என்னஉரை செய்தவரோ.

கண்ணனின் விடை - ஆத்ம சொரூபமான தன் வடிவினை மறதி என்னும் அறிவின்மையால் உடலில் நான் என்னும் புத்தி வந்து சேர்ந்தது. அவ்வறிவின்மை நீங்குமாயின் நான் என்னும் அபிமானமும் உலகப் பற்றும் நீங்கிவிடும்.

39. **அந்தமுறை அஞ்ஞானம் அணுகுவதும் போவதுவும்**
சந்தயம்இல் லாதுஅறியத் தயவுஆகக் கூறும்என.

அருச்சுனன் வினா - அஞ்ஞானம் வருகின்ற வகையும் அது தீர்கின்ற வகையும் எப்படி என்று தெளிவாக நான் உணரும் பொருட்டுத் தயவு செய்து கூறுக.

40. **அஞ்ஞானம் வந்தது அனாதிஅது சொல்வதுஅல்ல**
மெய்ஞ்ஞானத் தாலே விடும்என்று உரைத்தவரோ.

கண்ணனின் விடை - அவ்வறியாமை அநாதியானது. அவ்வறிவின்மை இடையில் வந்ததாகச் சொல்ல முடியாது. குருவருளால் கிடைத்த தத்துவ ஞானத்தினாலேயே அஞ்ஞானம் விட்டுப் போகும். (ஒளிவந்தால் இருள் நீங்குவது போல).

41. **இரவிஎதிர் அடுத்துவந்த இருள்போல அஞ்ஞானம்**
வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை ஏதுஎனவே.

அருச்சுனன் வினா - சூரியன் முன்னர் இருள் வந்துள்ளது என்பது பொருந்தாது. இருள் வடிவமான அறியாமை அறிவு வடிவமான ஆன்மாவை எப்படி மறைக்கும்? அது எப்படிப் பொருந்தும்?

42. **அந்தஅறி வுவந்தால் அஞ்ஞானம் இல்லைஅப்பால்**
சந்ததமும் ஆனந்த சாகரம்காண் என்றவரோ.

கண்ணனின் விடை - அறிவு வடிவமாக இருக்கும் (பிரம்ம சொரூபமான) ஆன்மாவில் அறிவின்மை என்னும் இருள் ஒரு போதும் சேர்தல் பொருந்தாது. இந்த

---

* மானம் – அபிமானம்.

அறிவு உண்டானபின் அறியாமை என்பது இல்லை. இவ்விதமான அறிவு உறுதியாய்த் தோன்றியபின் எப்போதும் நீ இன்பக் கடல் வடிவம் என்று அறிவாய்.

43. வேதாந்தத் தால்குருவால் மெய்ஞ்ஞானம் வந்தவுடன்
தீதான துக்ககம் தீராதது ஏதெனவே.

அருச்சுனன் வினா – குருவின் அருளால் கிடைத்த வேதாந்தப் பயிற்சியால்• உண்மையான ஆத்ம அறிவு வந்த அந்தப் பொழுதிலேயே கொடிய இன்ப துன்பங்கள் தீராமைக்கு என்ன காரணம்?

44. பற்றுஅறுமோ துக்ககம் பரோட்சஞா• னத்தாலே
அற்றம்ஆம் அவ்இரண்டும் அபரோட்சத்து• என்றவரோ.

கண்ணனின் விடை – பரோட்ச ஞானம் என்ற தத்துவ அறிவினால் அறிவின்மை நீங்காதபோது அதனால் உண்டாகும் இன்ப துன்பங்களின் பற்று நீங்குமோ? (ஆகாது என்பது கருத்து) எந்த அறிவால் நீங்கும் எனக் கேட்பின், அனுபவ அறிவினால் (அபரோட்ச ஞானத்தால்) அறிவின்மை நீங்கி இன்ப துன்பங்களாகிய இரண்டும் நீங்கும்.

45. பரோட்சம்அப ரோட்சம்எது பகுத்துஉரைக்க வேண்டும்என்தன்
திரோதம்ஆம் புத்திநன்றாத் தெளியும்ப டிக்குஎனவே.

அருச்சுனன் வினா – பரோட்ச அறிவு எது? அபரோட்சம் எது? மாயை என்ற திரையினால் மறைக்கப்பட்டிருக்கும் புத்தியுடைய எனக்குத் தெளிவுண்டாகும்படி உரைத்தருள்க.

46. பகர்ந்தசத்த ஞானம்ப ரோட்சம்அ னுபவத்தால்
அகம்பிரமம் எனும்ஞானம் அபரோட்சம் என்றவரோ.

கண்ணனின் விடை – கேள்வியினால் (குருமுகமாக) உணரப்படும் அறிவு முன்னர்க் கூறிய பரோட்ச ஞானம் ஆகும். பயிற்சியின் முதிர்வால் நானே பிரம்ம சொரூபம் என்று உணரும் அறிவே அபரோட்ச ஞானம்.

- *சிரவணம் மனனம் நிதித்யாசனம் என்ற பயிற்சிகள்.*
- *பரோட்ச ஞானம் • பிரம்மம் இருக்கிறது என்ற அறிவுத்தெளிவு*
- *அபரோட்ச ஞானம் • பிரம்மமே நான் என்று சந்தேகமறத் தெளிந்து உணருதல்.*

47. தான் பிரமம் என்றறிந்தும் தனுவைத்தான் என்ற புத்தி
ஏன் போகவில்லை அதை எனக்கறியப் புகலும்என.

அருச்சுனன் வினா – கண்ணா! நானே பிரம்மம் என்ற அபரோட்ச ஞானம் வந்த பிறகும் 'என்னுடைய உடல் தான் நான்' என்ற எண்ணம் ஏன் போகவில்லை? அதை எனக்குப் புரியும்படி கூறுங்கள்.

48. கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்தயோ கங்களினால்
ஆன்பிரமத்து அனுபவம்வந்து அதுதீரும் என்றவரோ.

கண்ணனின் விடை – கேள்வியாலும் மனனத்தாலும், தொடர்ந்து செய்யும் சாதனைகளாலும் பிரம்மத்தை அறியும் அனுபவம் உண்டாகும். அப்போது சரீரமே 'நான்' என்ற உணர்வு நீங்கும்.

(ஞானாசிரியனை அடைந்து குருமுகமாகச் சித்த சுத்தியுடன் நான்யார் என்ற கேள்விக்குத் தெளிவான விளக்கம் கேட்பது சிரவணம்.

மனத்தால் குரு முகமாகக் கேட்டதைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துத் தெளிவடைதல் மனனம்.

ஆத்மாவுக்குப் பயனில்லாத விஷயங்களைத் தடுத்து தொடர்ச்சியாக 'அஹம் பிரம்மம்' என்று சிந்தித்தல் நிதித்தியாசனம்.)

49. ஆதிஆம் சிற்சொருபம் ஆகாத தான்இனிமேல்
சோதிமனன் ஆதியினால் சொருபம்ஆ மோஎனவே.

அருச்சுனன் வினா – ஆத்மாவாகிய தான் முன்னரே அறிவு வடிவான பிரம்ம சொரூபமாக இல்லாதிருந்து தற்போது கடைபிடிக்கும் சிரவண, மனன, நிதித்தியாசனங்களினால் அறிவு வடிவான பிரம்ம சொரூபம் ஆகுவனோ?

50. எப்போதும் சின்மயம்தான் எனல்மறந்து தேடுவது
செப்புமிடற்று அணிஇருக்கத் தேடுதல்போல் என்றவரோ.

கண்ணனின் விடை – ஆன்மாவாகிய தான் முக்காலத்தும் ஞான வடிவமே என்பதனை மறந்து தேடுவது, தான் முன் அணிந்துள்ள அணி கழுத்தில் இருக்கும் போதே அதனை மறந்து அது தொலைந்து போய் விட்டதாக எண்ணித் தேடுவது போலாகும்.

51. தேடியபின் தேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொரூபம்
கூடுவனோ யானென்கு றைதீரச் சொல்லும்என.

அருச்சுனன் வினா – சிரவணம் மனனம் முதலிய பயிற்சிகளால் இந்த உடல்தான் நான் என்ற உணர்வு விட்டு நீங்கி ஞான வடிவினை நான் அடைவேனோ என்ற எனது சந்தேகம் தீர்த்தருள்வீராக.

52. வந்தஉடல் வேறுஆயும் வாசனையால் தான்எனலால்
சந்தயம்என் தன்சொரூபம் தான் ஆதற்கு என்றவரே.

கண்ணனின் விடை – மானுடப் பிறவியில் வந்த சரீரம் பூர்வ ஜன்ம கர்ம வினைகளினால் தானே வந்தது? பழைய வாசனைகளின் தாக்கத்தால் உடலை “நான்” என்று நினைக்கிறாய். அது நீங்கிய உடனே உண்மையான ஆத்ம வடிவத்தை உணர்ந்து, ஆன்ம சொரூபமாகவே நிலை பெறுவாய் என்பதில் சந்தேகமே கிடையாது.

53. தனுவைத்தான் எனும்பிரமை சத்தஞா னத்தில் அறாது
அனுபவமெய்ஞ் ஞானத்தால் அறும் வகைஏது உரையும்என.

அருச்சுனன் வினா – உடலை ஆத்மா என்று கருதும் மயக்கம் கேள்வி அறிவினால் நீங்குவதில்லையே. அனுபவ வடிவான மெய்ஞானத்தை அறிந்தபிறகே அப்பிரமை நீங்குகின்ற வழிவகை யாது?

54. விளக்குவிளக்கு எனும்அதனால் வெய்யஇருள் போய்விடுமோ
துளக்கம்இலா விளக்குஏற்றில் தொலையும்இருள் என்றவரே.

கண்ணனின் விடை – விளக்கு விளக்கு என்று பலமுறை சொல்வதாலேயே இருள் நீங்கி விடுமா? நீங்காது. அசைவில்லாத விளக்கு ஏற்றப்படும் போதுதான் இருள் நீங்கும்.

55. நெடுங்காலம் ஆன்மாவை நீங்காத அஞ்ஞானம்
விடுங்காலம் எந்நாளோ மெய்ஞ்ஞானத் தால்எனவே.

அருச்சுனன் வினா – நீண்ட நாட்களாக ஆத்மாவை விட்டு நீங்காது கூடவே இருந்த அறிவின்மையானது மெய்யறிவினால் நீங்குகின்ற காலம் எந்நாளோ?

56. அந்தகா ரம்குகையில் ஆயிரம்நாள் இருந்தாலும்
செந்தீபம் கண்டவுடன் தீர்வதுபோல் என்றவரோ.

கண்ணனின் விடை - குகையில் உள்ள இருள் நெடு நாளாக இருந்தாலும், சிவந்த சுடரைக் கண்ட போதே இருள் நீங்குவது போல் தத்துவ அறிவு உண்டானவுடன் அறிவின்மையும் நீங்கும்.

57. கருமயோ கம்தவமே காரணமா நீங்காமல்
அருமையா ஞானம்வந்தோ அஞ்ஞானம் போம்எனவே.

அருச்சுனன் வினா - அஞ்ஞானமானது யாகம் போன்ற புண்ணியச் செயல்களாலும் யோகம் தவம் இவற்றினாலும் நீங்காமல் அடைதற்கரிதான மெய்யறிவு உண்டான பின்தான் நீங்குமோ?

58. குத்துவெட்டும் படைகளினால் கூடுமோ இருள்துரக்க
உத்தமம்ஆம் ரவிஉதித்தால் ஓடும்இருள் என்றவரோ.

கண்ணனின் விடை - குத்தவும் வெட்டவும் பயன்படும் ஆயுதங்களால் இருளினை நீக்கிட முடியுமோ? முடியாது. உலகிற்கு எல்லா நன்மைகளையும் செய்விக்கும் சூரியன் உதயமானால் இருள் தானாகவே ஓடிவிடும்.

59. அஞ்ஞான இருள்துரக்க அறியாத நல்லகன்மம்
மெய்ஞ்ஞானம் தனைப்பரிக்கும் விதம்எவ்வாறு எனவினவ.

அருச்சுனன் வினா - அஞ்ஞானம் என்ற இருளை நீக்குவதற்கு நல்ல கருமங்கள் உதவி செய்யாது என்றால் உண்மை என்று நான் நம்பிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தில் நான் செய்த நல்ல கருமங்களினால் எனக்கு ஏற்படும் பயன் யாவை?

60. இந்திரசா லம்போல இவ்வுலகை நம்மிடத்தில்
தந்திரமாத் தோற்றுவித்தோம் சத்தியம்அல என்றவரோ.

கண்ணனின் விடை - இந்திர சாலம் செய்யும் மந்திரவாதியின் வித்தையில் தோன்றிய பொருள்கள் எல்லாம் நிஜமான பொருள்களாகத் தெரிவது போல, நம்மிடத்தில், பொய்யான இவ்வுலகை சத்தியம் போலத் தோற்றமளிக்கச் செய்யும்படி விளையாட்டாக உண்டாக்கினோம். ஆதலின் இது உண்மையன்று பொய்யே.

61. **மித்தைதானும் சகத்துநின்பால் விளங்குமோ எனவினவ**
சுத்திதனி லேரசதம் தோன்றுதல்போல் என்றவரோ.

அருச்சுனன் வினா – பொய் என்று அருளாளர் கூறும் இவ்வுலகம் பிரம்ம சொரூபமான உன்னிடத்துத் தோன்றுமோ?

கண்ணனின் விடை – கிளிஞ்சலிடத்தில் வெள்ளி• தோன்றுதல் போல் மெய்யே வடிவான நம்மிடத்தில் இப்பொய்யாகிய உலகம் உண்டாயிற்று.

62. **அயல்வெள்ளி சுத்தியின்மேல் ஆரோபி தம்கூடும்**
இயல்உள்ள சகமும்முன்வேறு இருந்ததும்உண் டோஎனவே.

அருச்சுனன் வினா – வெள்ளி என்ற பொருளை நான் அறிவேன். அதனால் கிளிஞ்சலின் பளபளப்பைக் கண்டு வெள்ளி என நினைக்கிறேன்.

ஆனால் இந்த உலகத்தை நான் அறியும் போது இதற்கு முன்னால் தாங்கள் சிருஷ்டித்த உலகம் வேறு ஒன்று இருந்ததா?

(வெள்ளியைத் தெரிந்த படியால் சிப்பியில் வெள்ளி தெரிந்தது. அதுபோல நான் மயங்குவதற்கு ஏற்கனவே பொய்ப் பிரபஞ்சம் ஒன்று இருந்ததா?)

63. **மனமயக்கம் பிடிக்கில்இல்லா வத்துவும்தோன் றிடும்அதுவோ**
கனவில்விண்ணில் தான்பறக்கக் கண்டதுபோல் என்றவரோ.

கண்ணனின் விடை – உள்ளம் மயக்கம் அடைந்தால் இல்லாத பொருளும் உள்ளது போல் தோன்றும். எப்படி என்றால் பறக்க முடியாதவன் தானே விண்ணில் பறப்பதாகக் கனவு கண்டது போல் ஆகும்.

64. **கனவுபோல்பிர பஞ்சம்என்றீர் கண்விழித்தால் கனவுபொய்யாம்**
வினவுசகம் தினமும்பொய்யா விளங்குவதுஎன் சொல்லும்என.

அருச்சுனன் வினா – கனவு பொய்யாவது போலவே இவ்வுலகமும் பொய் என்றீர். அந்தக் கனவுலகம் கண் விழித்தால் பொய்யாகி விடும். நான் கேட்கும் இவ்வுலகம் நாள்தோறும் சத்தியமாக விளங்குவதாகத் தோன்றுகிறதே! அதற்கு யாது காரணம்.

---

* *சிப்பியில் வெள்ளி கிடையாது. ஆனால் நாம் அதன் பளபளப்பைக் கண்டு வெள்ளி என்று மயங்குகிறோம்.*

65. **மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வரும்அளவும்**
பொய்யாம்பின் கனவுஅதுபோல் போதம்வரில் என்றவரோ.

கண்ணனின் விடை – தத்துவ ஞானம் வருகின்ற வரையும் இவ்வுலகம் சத்தியமாகத் தோன்றும். தத்துவ ஞானம் வந்தபின்னர் கனவில் காணும் உலகம் போல் கண்ணாற் காணும் உலகமும் பொய்யே என்பது விளங்கும்.

66. **முன்புகண்ட கனவு•பொய்யாம் முழிசாக்ரம்• போலஎன்றீர்**
பின்புமுத்தித் தசைஅடைந்தும் பிரபஞ்சம்நிற்பது ஏதுஎனவே.

அருச்சுனன் வினா – கண் விழித்துக் கொள்ளும் போது தோன்றும் விழிப்பு நிலையில் முன்பு கண்ட கனவு பொய்யாவது போல என்று அருள் செய்தீர். பின்னர் வீடு பேற்றினை அந்த ஞானத்தால் அடைந்த பின்னும் உலகம் முன்பு போலத் தோன்றிக் கொண்டு இருப்பதற்குக் காரணம் யாது? அதனால் சுகதுக்கம் உண்டாகுமா?

67. **தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம்• போல்வதுஅல்லால்**
பரந்தசகம் காரியத்தில் பயன்படாது என்றவரோ.

கண்ணனின் விடை – நெருப்பினால் எரிந்து போன பின்னும் மடித்து வைத்த துணிபோல் தோற்ற மாத்திரமாய் இருக்கும் துணி எதற்கும் பயன்படாதது போல இவ்வுலகத் தோற்றம், அதனால் ஏற்படும் சுகதுக்கங்கள் ஞானிகளைப் பாதிப்பதில்லை.

68. **கன்மவினை அஞ்ஞானம் கடந்தும்அதன் காரியமாம்**
புன்மைஉறு மெய்உடனே போகாதது ஏதுஎனவே.

அருச்சுனன் வினா – பிறவி உண்டாவதற்கு காரணமாக இருக்கின்ற சஞ்சிதகர்மமும், இந்த சரீரத்தில் செய்த நல்வினை தீவினைகளாகிய ஆகாமிய கர்மமும், அஞ்ஞானமும் ஆகிய இவை தத்துவ ஞானத்தினால் நீங்கினாலும் இழிவான உடல் உடனே நீங்காமல் சிலகாலம் வாழ்கின்றதே ஏன்?

- *கனவு • சொப்பனம்.*
- *சாக்ரம் • விழிப்பு*
- *தெத்தபடம் • எரிந்து போன மடிப்புக் கலையாத துணி*

69. வெட்டவிழும் மரம்பசந்து விளங்குதல்போல் சிலகாலம்
நட்டகன்மம் மாய்ந்தும்அங்கம் நடித்திடுங்காண் என்றவரோ.

கண்ணனின் விடை – கோடரியால் வெட்டப்பட்டுச் சாய்கின்ற மரம் வேரின் சம்பந்தம் அற்றபிறகும் காயாது பசுமையாகச் சிலகாலம் தோன்றுதலைப் போல அஞ்ஞானம் நீங்கினாலும் முற்பிறவிகளில் செய்த வினைகள் (பிராரப்த கர்மம்) உள்ளவரை உடல் சில காலம் நீடித்திடும்.

70. சென்மம்போய் முத்தியினைச் சேரச்சி லர்இருக்கத்
தொன்மைஆன் மாபலவோ சொரூபம்ப கரும்என.

அருச்சுனன் வினா – சிலர் பிறப்பினின்றும் நீங்கி வீடுபேறு அடையச் சிலர் மட்டும் அதனைச் சேராமல் உலக விஷயங்களில் பற்றுடையோராய் ஈடுபாடு கொண்டிருப்பது ஏன்? அநாதியாய் இருக்கின்ற ஆன்மா பலவோ? அப்படி எனில் அவ்வான்மாவின் உண்மை வடிவினைக் கூறியருள்க.

71. பிரமம்என்றும் ஈசன்என்றும் பெருகுபல சீவர்என்றும்
உரைமயக்கம் அலதுஆன்மா ஒருவனே என்றவரோ.

கண்ணனின் விடை – பிரமம் எனவும் ஈசன் எனவும் அநேக சீவர்கள் எனவும் கூறுவது ஒரு வித மயக்கமே. ஆனால் ஆத்மா ஒன்றே.

72. ஏகம்தான் ஆன்மா எனும்வகையே மெய்ஆனால்
ஆகந்தோ றும்பலவாய் அமர்ந்ததுஎன்னோ சொல்லும்என.

அருச்சுனன் வினா – ஆத்மா ஒன்று எனக் கூறினீர்கள். அது உண்மையானால் அந்த ஏக ஆன்மா உடல்கள் தோறும் வேறு வேறாய்த் தோன்ற யாது காரணம்?

73. பலகடத்தில் சலத்தூடு பானுவிம்பம் தோன்றுதல்போல்
தொலைவுஇல்புத்தி தொறும்ஆன்மா தோன்றுதல்காண் என்றவரோ.

கண்ணனின் விடை – பல குடங்களில் உள்ள நீரினிடத்தில் சூரியனின் பிரதி பிம்பம் பலவாகக் காணப்படுதல் போல எண்ணிக்கையில் முடிவில்லாத மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் தோறும் ஆன்மா தோன்றுவதை நீ அறிவாய்.

74. ஆதித்தன் போல்ஆன்மா அளவுஇல்புத்தி தொறும்தோன்றில்
சாதிக்கும் முத்திஎவர் தமக்குஅதனைச் சாற்றும்என.

அருச்சுனன் வினா – ஒரே சூரியன் குடத்து நீரில் பலவாகத் தோன்றுதல் போல ஆன்மாவும் அளவிலாத அந்தக் கரணங்கள் தோறும் தோன்றுமெனில் கிடைக்கின்ற வீடுபேறு அந்தக்கரணம், ஆத்மா என்னும் இரண்டில் எதற்குக் கிடைக்கும்? என அருளிச் செய்க.

75. பந்தம்முத்தி தானும்அந்தப் பரந்தபுத்தி தனக்கேயாம்
அந்தவிம்பம் தனக்குஇலைஎன்று அறிவுவரச் சொன்னவரோ.

கண்ணனின் விடை – அஞ்ஞானத்தால் ஏற்படும் பந்தமும் வீடுபேறும் முன்னர்க் கூறியதுபோல் விரிந்து காணப்படும் அந்தக் கரணத்திற்கேயாகும். முன்னர்க் கூறிய பிம்ப வடிவான ஆத்மாவிற்குப் பற்றும் இல்லை வீடுபேறும் இல்லை.

76. பரம்ஏகம் ஆயும்அதில் பலசீவர் ஏதுஎனவே
ஒருகடலில் பலகுமிழி உதிப்பதுபோல் என்றவரோ.

அருச்சுனன் வினா – பரம்பொருள் ஒன்றாய் இருந்தும் அந்தப் பிரம்மத்தின் கண் பல சீவர்கள் தோன்றுவதற்குக் காரணம் யாது?

கண்ணனின் விடை – ஒன்றாய் இருக்கும் கடலில் பலநீர்க்குமிழிகள் காற்றினால் உண்டாவது போல பரப்பிரம்மத்தில் மாயை சம்பந்தப்படும்போது பல சீவர்கள் தோன்றுவார்கள்.

77. சீவன்அது தான்என்றும் சேரும்பி ரமம்என்றும்
ஆவதுவோ பேர்இன்பம் ஆங்கதுஎனக்கு ஓதும்என.

அருச்சுனன் வினா – தன் வடிவம் சீவாத்மா எனவும் தான் வழிபட்டு அடையத் தகுந்தது பரமாத்மா எனவும் அறிந்துகொள்வதே முக்தி நிலையா? அதனை எனக்குக் கூறியருளும்.

78. ஏகம்பி ரமம்இ ரண்டுஇலைநீ வேறும்அல
சோகம்உறும் பேதம்அறில் தோன்றும்இன்பம் என்றவரோ.

கண்ணனின் விடை – பிரம்மம் என்பது ஒன்றே. இரண்டாவதுபொருள் இல்லை. நீயும் அப்பிரம்மத்திற்கு அந்நியமானவன் அல்லன். துக்கம் வருவதற்குக்காரணமான வேறுபட்ட புத்தி நீங்கிவிட்டால் இன்ப நிலை உண்டாகும்.

79. சீவபே தம்போமோ சித்துஒன்றுஆ மோஎனவே
ஆவல்மனம் அறும்சுழுத்தி அவத்தையில்பார் என்றவரோ.

அருச்சுனன் வினா – சீவனுக்கும் பிரம்மத்துக்கும் உள்ள வேற்றுமை நீங்கிடுமோ? அங்ஙனம் வேறுபாடு ஒழிந்து ஒரே வடிவாக விளங்குமோ?

கண்ணனின் விடை – ஆசைகொண்ட அந்தக்கரணங்களில் ஒன்றான மனம் சுழுத்தி அவத்தையில் வேறுபாடு நீங்கி ஒன்றாக விளங்குவதை உணர்வாய்.

80. பேதம்அல இவ்வுலகம் பிரமமயம் என்றுஅறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாதது ஏதுஎனவே.

அருச்சுனன் வினா – கண்ணுக்குத் தோன்றுகின்ற இவ்வுலகம்அந்நியம் அன்று. அது பிரம்ம வடிவமே என்பதை அறிந்தும் ஐம்பூத வடிவாகத் தோன்றுகிறதே. அதற்கு என்ன காரணம்?

81. கானலைநீர் என்றுஓடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்
வான்உலவு நீர்ஆகி வயங்குதல்போல் என்றவரோ.

கண்ணனின் விடை – பாலை நிலத்தில் சூரிய வெப்பத்தால் தோன்றும் உஷ்ண கிரணத்தினை நீர் என்று கருதிச் சென்று, இது உண்மையான நீரன்று கானலே, என்று உணர்ந்தவர்க்குக் கூட அம்மயக்கம் நீங்கிய பின்னும் நீரோட்டம் இருப்பதுபோல் கண்களுக்குப் புலப்படுகிறது. அதுபோல இவ்வுலகம் பிரம்ம வடிவம் என்றறிந்த பின்னரும் பஞ்ச பூத வடிவாகத் தோன்றும்.

82. அறிவானும் நல்அறிவும் அறியப்ப டும்பொருளும்
பிறிவாய்மூன்று ஆயிருத்தல் பேதம்அல வோஎனவே.

அருச்சுனன் வினா – அறிவான் என்றும், அறிவு என்றும், அறியப் படும் பொருள் என்றும் மூன்றாகப் பிரித்திருக்கிறதே. இது பிரம்மம் ஒன்றே என்று தாங்கள் சொன்னதற்கு விரோதமல்லவா?

(அறிவான், அறிவு, அறியப்படும் பொருள் இவற்றை 'திரிபுடி' என்று வேதாந்த பாஷையில் சொல்வார்கள்.

அறிவான் - பொருளைப் பார்த்தோ கேட்டோ அறிபவன்.

உதாரணம் : மரத்தைப் பார்ப்பவன்.

அறிவு - பார்த்த அல்லது கேட்ட பொருளைப் பற்றிய உணர்வு அல்லது அறியும் தன்மை.

உதாரணம் - இது பகைமையான மரம் என்று அறிதல்.

அறியப்படும் பொருள் - நாம் பார்க்கின்ற அல்லது கேட்கின்ற பொருள், மரம்)

83. சொப்பனத்தில் தனித்துஒருவன் தோற்றம்வேறு இல்லைஅங்கே
கற்பனையாம் பொருள்அறிவு காண்பவன்போல் என்றவரே.

கண்ணனின் விடை – ஒருவன் தனியே தூங்குகின்றான். அவன் கனவில் பல சம்பவங்கள். பலரைப் பார்க்கிறான். விழித்தபிறகு அவன்தான் இருக்கிறான். எதுவும் இல்லை. யாரும் இல்லை. அந்தக்கரணத்திலுள்ள எண்ணக் கூட்டங்கள் கனவாக உருவெடுத்தன. கனவும் காண்பவனும் ஒன்றே.

84. கற்பனையாம் பேதங்கள் காணாமல் போம்வகையை
விற்பனமாய் நான்அறிய விளம்பும்என வேவணங்க.

அருச்சுனன் வினா – பொய்யான, கற்பனை வேறுபாடுகள் தோன்றாமல் நீங்கும் தன்மையினை அடியேன் தெளிவாய் உணர்ந்து கொள்ளும்படி கூறியருள்க.

85. துரியம்ஆம் யோகத்தால் தூயமனம் லயம்ஆனால்
அரியமூ வகைவிகற்பம் அழியும்என்று சொன்னவரே.

கண்ணனின் விடை – தன்மயமாய் நிற்கும் நிதித்தியாசன யோகப் பயிற்சியால் தூயமனம் பிரம்ம சொரூபத்தில் ஒடுங்குமானால் மூன்றுவகையாக உள்ள வேறுபாடுகள் மறையும்.

86. சிறந்துஇருக்கும் ஆன்மாவும் செகம்எல்லாம் நிறைந்துஇருந்தும்
மறைந்துஎனக்குத் தோன்றாத வகைஏது சொல்லும்என.

அருச்சுனன் வினா – சிறப்பியல்புகள் நிறைந்த ஆன்மா உலகம் முழுதும் நிறைந்து இருந்தும் அடியேனுக்குப் புலப்படாத வகை யாது?

87. சத்துச்சித்தா னந்தம் தாம்மூன்றும் அதன்உடனே
ஒத்துஉற்று நாமஉ ருவம்ச கம்ஆகி.

கண்ணனின் விடை - சத்துசித்து ஆனந்தம் என்று மூன்று விதமாக விளக்கப்படும் பிரம்மத்துடன் நாமம் ரூபம் (பெயர், வடிவம்) என்ற இரண்டும் ஒன்றாய்ப் பொருந்தி உலகம் தோன்றியிருக்கிறது.

88. இருக்கையினில் தோன்றாது இவைமூன்றும் பிரமம்என
மரிக்கில்*வரும் பின்இரண்டு மறிசகம்என்று உரைத்தவரோ.

இவற்றைப் பாகுபடுத்தி உணரும் தன்மை இல்லாதபடியால் ஆன்மாவைப் பற்றி உனக்கு எதுவும் விளங்கவில்லை. சத்துசித்து ஆனந்தம் இம்மூன்றும் பிரம்மம் வடிவம் என்பதையும், நாமம் ரூபம் இரண்டும் அழியும் தன்மை உடைய உலக வடிவம் என்பதையும் நீ உணர்ந்து கொள்ளும் போது ஆனந்த வடிவமான ஆன்மாவைக் காண்பாய். நாமம் ரூபம் இரண்டையும் மறுத்தால் தெளிவு உண்டாகும்.

89. அறிந்துகொள்ஞா னத்தாலே ஆன்மாவை என்றுஉரைத்தீர்
சிறந்துஒளிரும் ஆன்மாவும் திருசியமா மோஎனவே.

அருச்சுனன் வினா - அபரோட்ச ஞானத்தினால் ஆத்மாவை உணர்ந்து கொள்க என்று சொன்னீர். சத்து சித்து ஆனந்த மயமாய்ச் சிறப்புற்று விளங்கும் ஆன்மாவும் காணப்படும் பொருள் ஆகுமோ?

90. முந்தியஞா னத்தாலே முதிரும்அஞ்ஞா னம்துறக்கில்
சிந்தையில்ஆன் மாச்சயம்ஆய்த் திகழும் என்று சொன்னவரோ.

கண்ணனின் விடை - அபரோட்ச ஞானம் திடப்படுவதனால் அஞ்ஞானம் நீங்கிய உடனே சித்தத்தின் கண் உள்ள ஆத்மா தானாகவே விளங்கும்.

* மரிக்கில் - சிந்தனை செய்தால்.

91. **இனியமுத்திச் சுகம்இருப்பது எப்படிஎன் றேவினவ**
அநுபவத்தில் அறிவிடயா னந்தம்போல் என்றவரோ.

அருச்சுனன் வினா – யாவராலும் விரும்பத்தக்க வீடு என்ற பேரின்ப நிலை எவ்வாறிருக்கும்?

கண்ணனின் விடை – இனிப்பை உண்டு அனுபவித்திராதவனுக்கு தித்திப்பு என்றுசொன்னால் அந்தச் சுவையை உணர முடியாது. இனிப்பை நாவினால் சுவைத்தால்தான் உணரமுடியும். அதுபோல பேரின்பநிலையை தானே உணர்ந்துதான் அறியமுடியும்.

92. **மனலயம்வந்தவர்அலது மற்றுஇலரோ முத்தர்எனச்**
சனகனைப்போல் சீவன்முத்தர் தாமும்உளர் என்றவரோ.

அருச்சுனன் வினா – மனம் ஒடுங்கிய சமாதி நிலையால் அடக்கம் கைவரப் பெற்றவர்களே அல்லாமல் வீடு பேறடைந்தவர் வேறு யாரும் இல்லையோ?

கண்ணனின் விடை – சனகப் பேரரசனைப் போலச் சமாதி நிலையிலேயே மூழ்கி இராமல் கடமைகளைச் செய்துகொண்டே வீடுபேறடைந்தோரும் இருக்கின்றார்கள்.

93. **சீவன்முத்தி அடைந்தோர்கள் செயலும்அவர் தம்குணமும்**
நாஉரைக்கும் வாசகமும் நான்அறியச் சொல்லும்என.

அருச்சுனன் வினா – வீடுபேறடைந்தோரது தொழிலும், குணமும் அவர்கள் சொல்கின்ற வாசகமும் அடியேன் உணர்ந்து கொள்ளுமாறு உரைத்தருள்க.

94. **வரும் கருவு பிறப்பி னொடு வளர்தல் பருத்தல்குறைதல்**
ஒருங்கலும் மெய்க்கென்று அதனை ஒறுத்திருப்பார் என்றவரோ.

கண்ணனின் விடை – சீவன் முத்தர்கள் தாயின் கருவிலிருந்து பிறத்தலும் பின் வளர்தலும் பெருத்தலும் சிறுத்தலும் அழிதலும் ஆகிய வேறுபாடுகளும் உடலுக்கே என்று தெளிந்து அந்தச் செயல்களை சகித்துக்கொண்டிருப்பார்கள்.

95. **பார்ப்பதுவும் கேட்பதுவும் பகர்வதுவும் செல்வதுவும்**
ஏற்பதுவும் கரணதன்மம் எனத்துணிவார் என்றவரோ.

பார்த்தலும், கேட்டலும், கூறலும், செய்தலும், நடத்தலும், பெறுதலும், வாங்குதலும் ஆகிய அனைத்தும் ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்களுக்கே உரிய தருமங்கள் என்று அறிந்துகொண்டிருப்பார்கள்.

96. பசிதாகம் உயிர்க்குளனவே பயம்துக்கம் சுகம்காமம்
வசிகோபம் மதிக்குளனவே மகிழ்ந்துஇருப்பார் என்றவரோ.

பசியும் தாகமும் பிராணனுடைய தர்மம் என்றும் அச்சம், துக்கம், சுகம், ஆசை, சினம் ஆகியன அந்தக்கரணத்திற்கே என்றும் கருதி எப்போதும் மகிழ்வுடனேயே இருப்பார்கள் *சீவன் முத்தர்கள்.*

97. வீடும்தா ரமும்உறவும் மேவிஎன்றும் இருந்தாலும்
நீடும்தா மரைஇலைநீர் நிகர்ஆவார் என்றவரோ.

வீட்டையும் மனைவியையும் சுற்றத்தாரையும் எப்பொழுதும் சேர்ந்தே இருந்தாலும் தாமரை இலைமேல் உள்ள தண்ணீர் அவ்விலை மேல் ஒட்டாது இருப்பது போல் இருப்பார்கள். (குடும்பப்பற்று நீங்கிவிடும்)

98. பற்றிடும்கா யமும்தானும் பன்னாள்ஒன்று ஆயினும்பின்
உற்றபுளி யம்பழமும் ஓடும்ஒப்பார் என்றவரோ.

பொருந்திய இவ்வுடம்பும் ஆன்மாவாகிய தானும் பலகாலம் பிரிக்க முடியாமல் ஒன்றாக விளங்கினாலும் ஞானமடைந்த பின்னர், பிஞ்சாய் இருக்கையில் பிரிவு படாமல் ஒன்றாய் இருந்து பின் முதிர்ந்த பொழுது புளியம் பழமும் ஓடும் ஒட்டாமல் விளங்குதல் போல் ஞானிகள் ஒன்றாய் இருப்பினும் உடற்பற்று நீங்கி வேறுபட்டு விளங்குவார்கள். (தேகப்பற்று நீங்கிவிடும்)

99. கூறும்உலகு இயற்கைஉடன் கூடினும்மெய்ஞ் ஞானம்வந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும்போல் திரிவார்காண் என்றவரோ.

உலக இயற்கையோடு பொருந்தியிருந்தாலும் உண்மையறிவு கைவரப்பெற்ற பெரியோர் சேறும் அதனுள் சேறு படியாமல் உலவும் பிள்ளைப் பூச்சியினையும்* போல் இவ்வுலக வாழ்க்கையில் பற்றில்லாமல் தங்கள் கடமைகளைச் செய்து வருவார்கள்.

---

* *சேற்றில் உழலும் ஒரு வகைப் பூச்சி. அதன் மீது சேறு படியாது.*

100. ததியூடு கடைந்தவெண்ணெய் தான்மோரில் கிடப்பதுபோல்
மதியோடு கூடினும்பின் மயங்கார்காண் என்றவரோ.

தயிரில் ஒன்றாய்க் கலந்து இருக்கும் வெண்ணெய் கடைந்து எடுக்கப்பட்ட மோரினில் கலவாது வேறுபட்டுக் கிடத்தல் போல ஞானம் வந்தபின் அந்தக்கரணச் செயல்களோடு ஞானிகள் சேர்ந்திருந்தாலும் மயங்கமாட்டார்கள்.

101. அருச்சுனன்தன் பொருட்டாக அனைவருக்கும் ஞானம்வரப்
பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர்.

அருச்சுனனை முன்னிட்டு அனைவருக்கும் ஞானம் உண்டாகும்படி உபதேசித்து சுகத்தைக் கொடுக்க வந்த ஞானாசாரியரே தொட்டிலில் கண் வளர்க.

102. ஆயர்குல மாதர் அளவுஇலோ ரைப்புணர்ந்தும்
தூயபதி னாறுஆ யிரவருடன் தோய்ந்துஇருந்தும்.

அளவிலாத இடையர் குலப் பெண்களைச் சேர்ந்தும் தூயவர்களான பதினாறாயிரம் தேவ கன்னியரோடு சேர்ந்திருந்தும்;

103. பரமமு னிவர்முன்னே பரிச்சித்தைத் தீண்டிஅன்று
பிரமசாரி யம்செலுத்தும் பேர்ஒளியே கண்வளரீர்.

உத்தரையின் வயிற்றில் இறந்து பிறந்த பாண்டவர்களின் பேரனாகிய பரிச்சித்து என்ற சிசுவைத் தங்கள் கைகளால் தொட்டு உயிர் பெறச் செய்தீர்கள். "நித்திய பிரமசாரியின் கரங்களால்தான் குழந்தை உயிர் பெற்றெழும்" என்ற வாக்கைத் தங்கள் ஆச்சரியமாக மெய்யாக்கினீர்கள். அப்படிப்பட்ட தெய்வீகப் பேரொளியே தொட்டிலில் கண் வளர்வீராக.

நூல் கற்போருக்கு உரிய பயன்

104. ஆதிமூ லம்விசயற்(கு) ஆதிமறை யின்பொருளை
ஓதி உணர்த்தும்இந்த உண்மைதனைக் – காதல்உற்றுக்
கற்றோரும் கேட்டோரும் காசினியில் வாழ்ந்துமுத்தி
பெற்றோர்கள் முத்தர்பெறும் பேறு.

ஆதிமூலமாகிய கண்ணபிரான் விசயனுக்கு வேதத்தின் பொருளினை உணர்த்திக் காட்டிய இந்த உண்மையாகிய கீதாசாரத்தினை விருப்பமுடன் படித்தோரும், குருமுறையாய் கேட்டு ஓதியவரும் இவ்வுலகில் நெடுநாள் வாழ்ந்து ஞானிகள் அடையும் பேறாகிய வீடு பேற்றினை அடைவார்கள்.

கீதாசாரம் முற்றும்

(பாடம் முடிவுறும் பொழுது)

குரு வணக்கம்

5 தந்தைதாய் ஆவானும் சார்கதி இங்கு ஆவானும்
அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும்-எந்தம் உயிர்
தான் ஆகுவானும் சரண் ஆகுவானும் அருள்
கோன் ஆகுவானும் குரு.

வேண்டுதல்

6 ஓம்।ஸஹனாவவது ஸஹனௌ புனக்து ஸஹவீர்யம் கரவாவகை
தேஜஸ்வினா அதீத மஸ்து மாவித் விஷாவஹை॥
ஓம் சாந்தி। சாந்தி॥ சாந்திஹி।॥

7 ஹரிஹி ஓம்! ஓம் ஸ்ரீ குருப்யோன் நமஹ॥

கோவிலூர் மடாலய வெளியீடுகள்

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** (முதல் பாகம்)
  (நாநா சீவ வாதக் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு,
  சசிவன்ன போதம் மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** (இரண்டாம் பாகம்)
  (மகாராஜா துறவு, வைராக்கிய சதகம்,
  வைராக்கிய தீபம் ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** (மூன்றாம் பாகம்)
  (இலட்சணா விருத்தி, வேதாந்த சூடாமணி,
  கைவல்ய நவநீதம் ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** (நான்காம் பாகம்)
  (விவேக சூடாமணி, அஞ்ஞவதைப் பரணி,
  ஈசுவரகீதை ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **பகவத் கீதை**
  (ஸ்ரீ பட்டனார் – மூலமும் எளிய உரையும்)

- **பகவத் கீதை**
  (ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரை)

- **கைவல்லிய நவநீதம்**
  (ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரை)

- **சங்க இலக்கிய நூல்கள்** (11 பகுதிகள்)
  முதன்மை பதிப்பாசிரியர்கள் :
  தெய்வத்திரு. தமிழண்ணல்
  தெய்வத்திரு. சுப. அண்ணாமலை

- **திருமந்திரம்** (3 பகுதிகள்)
  (பாடபேத ஆய்வும் உரையும், சுப. அண்ணாமலை)